மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை.

**முன்னிலை திரு.எம்.சுனில் ராஜா, பி.ஏ.,எம்.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03 ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண். 118/2014**

---

சுடலையாண்டி ... வாதி

//எதிர்//

1. மூக்கன்

2. செயல் அலுவலர், இலஞ்சி பேரூராட்சி, தென்காசி தாலுகா

3. தமிழக அரசு தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் ... பிரதிவாதிகள்

(Amendment carried out as per order in I.A. No.2/2023, Dated 07.06.2023)

இவ்வழக்கானது என் முன்பு 03.10.2024 அன்று எழு வினாக்கள் வனைவதற்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கந்தசாமி, அவர்கள் முன்னிலையாகியும், 1 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஒய்.ஆசாத், அவர்கள் முன்னிலையாகியும், 2 வது, 3 வது பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.முத்துக்குமாரசாமி, அவர்கள் முன்னிலையாகியும், இன்று வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலித்து இவ்வழக்கில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்படுகிறது.

1. வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளதாக வழக்குரை இரண்டாவது தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதா?
2. இரண்டாம் பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டுள்ளவாறு எதிர் கோரிக்கை ஒன்றாவது தபசில் சொத்து மூன்றாவது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பொது நடைபாதையா?
3. இரண்டாம் பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டுள்ளவாறு எதிர் கோரிக்கை இரண்டாவது தபசில் சொத்து மேற்படி எதிர் கோரிக்கை ஒன்றாவது தபசில் சொத்தின் ஒரு பகுதியா?
4. வாதி தரப்பில் கோரப்பட்டுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

5. இரண்டாவது பிரதிவாதி தரப்பில் கோரப்பட்டுள்ள விளம்புகை, நிரந்தர உறுத்து கட்டளை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?

6. வேறு பரிகாரங்கள்?

வழக்கு விசாரணைக்கு வாய்தா 24 அக்டோபர் 2024

SUNIL RAJA MAHALINGAM

Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2024.10.03 17:35:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செங்கோட்டை.